# கவிஞர் தமிழ்ஒளி
# கவிதைகள்

தொகுப்பு
**தமிழ் வளர்ச்சித் துறை**
தமிழ் வளர்ச்சி இயக்ககம்
தமிழ் வளர்ச்சி வளாகம்.
முதல் தளம், தமிழ்ச் சாலை,
எழும்பூர்,
சென்னை - 600008.
தொலைபேசி: 044 28190412 / 13.

# கவிஞர் தமிழ்ஒளி

(21.09.1924 - 29.03.1965)

**த**மிழ்ஒளி அவர்கள் தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியை அடுத்த ஆடூர் அகரம் என்னும் சிற்றூரில் சின்னையா, செங்கேணி அம்மாள் இணையருக்குப் பிறந்தார். விசயரங்கம் என்பது தமிழ் ஒளியின் இயற்பெயர் ஆகும்.. தமது தொடக்கக் கல்வியைப் புதுவை முத்தியாலுப்பேட்டை நடுநிலைப் பள்ளியில் கற்றார். உயர்கல்வியைக் கலவைக் கல்லூரியில் படித்தார். மாணவராயிருந்தபோதே பாரதியார், பாரதிதாசன் கவிதைகளால் ஈர்க்கப்பட்டார்.

கவிஞர் தமிழ்ஒளி பாரதியாரின் வழித்தோன்றலாகவும், பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கி கவிதைகளைப் படைத்தவர். கவிதைகள் மட்டுமல்லாது கதைகள், கட்டுரைகள், இலக்கியத் திறனாய்வுகள், மேடை நாடகங்கள், குழந்தைப் பாடல்கள் எனப் பல இயற்றியவர். அவரின் கவிதைகள் தனித் தன்மை வாய்ந்தவை.

இவர் பொதுவுடைமைக் கொள்கைகளை உயிர் மூச்சாகக் கொண்டிருந்தவர். உலகத் தொழிலாளர்களின் உரிமை நாளான மே நாளை வரவேற்றுப் பாடியவர்.

தமிழ்ஒளியின் சிறுகதைகளில் வரும் பாத்திரங்கள் பொரும்பாலோர் ஒடுக்கப்பட்டவர்கள், தொழிலாளர்கள், போராளிகள் என அடித்தட்டு மக்களாகவே இருந்தார்கள்.

கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு (2023) அன்னாரின் பெயரில் தமிழ் வளர்ச்சித் துறையில் ஓர் அறக்கட்டளை நிறுவி பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டுதோறும் பள்ளி மாணவர்கள் கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் தெரிவு செய்யப்பெற்ற பாடல்களை ஒப்பித்தல் போட்டிகள் நடைபெறும்.

| **வ. எண்** | **பொருளடக்க அட்டவணை** | **பக்கம்** |
|---|---|---|
| 1. | மீன்கள் | 07 |
| 2. | தாவி எழு | 08 |
| 3. | குயில் | 09 |
| 4. | பொதுவுடைமைப் பொங்கல் | 10 |
| 5. | தமிழனே கேள் | 11 |
| 6. | கேளடி காதலி | 12 |
| 7. | வெற்றி முழக்கம் | 13 |
| 8. | மாளிகை அமைப்போம் | 14 |
| 9. | புதுக் குரல் | 15 |
| 10. | மே தினமே வருக | 16 |
| 11. | தமிழ்நாடு | 22 |
| 12. | ஜனசக்தி வாராய் | 24 |
| 13. | எவரெஸ்ட் பிடிபட்டது | 25 |
| 14. | புனல் மகள் | 26 |
| 15. | வழிப் பயணம் | 27 |
| 16. | நிலா | 29 |
| 17. | கவிஞன் | 30 |
| 18. | வருங்கால மனிதன் வருக | 31 |
| 19. | புதுமைப் பித்தன் | 32 |
| 20. | வேறு | 33 |
| 21 | உரிமை முரசு | 34 |

| | | |
|---|---|---|
| 22. | தென்மகள் வருகின்றாள் | 35 |
| 23. | எண்ணம் | 36 |
| 24. | வள்ளைப் பாட்டு | 37 |
| 25. | கண்ணம்மா | 38 |
| 26. | மழை | 39 |
| 27. | சேரன் கூத்து | 39 |
| 28. | எண்ணித் துணிந்தேன் | 40 |
| 29. | மழைத் துளி | 41 |
| 30. | நிலவைப் பிடித்தார் | 42 |
| 31. | அந்தரத்தில் மேடை அமைத்தார் | 44 |
| 32. | சமாதானக் குரல் | 45 |
| 33. | நெய்வேலி நாம் பெற்ற பேறு | 46 |
| 34. | இந்தி எதிர்ப்புப் போர் | 48 |
| 35. | தென்னம் பந்தல் | 49 |
| 36. | கவிஞர் கோமான் | 50 |
| 37. | சூரியன் | 51 |
| 38. | வானவில் | 52 |
| 39. | பார்க்க வா | 52 |
| 40. | காவிரியே வா | 53 |
| 41. | தமிழ்நாடு | 53 |
| 42. | மாதங்கள் | 54 |
| 43. | கிளி | 54 |
| 44. | ஔவைப் பாட்டி | 55 |

# 1. மீன்கள்

வான்கடல் தோன்றிடும் முத்துக்களோ - ஏழை
வாழும் குடிசையின் பொத்தல்களோ?
மாநில மீதில் உழைப்பவர்கள் - உடல்
வாய்ந்த தழும்புகளோ அவைகள்?

செந்தமிழ் நாட்டினர் கண்களெல்லாம் - அங்குச்
சேர்ந்து துடித்துக் கிடந்தனவோ?
சொந்த உரிமை இழந்திருக்கும் - பெண்கள்
சோக உணர்ச்சிச் சிதறல்களோ?

இரவெனும் வறுமையின் கந்தல்உடை - தனில்
எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?
அருந்தக்கூ ழின்றியே வாடுபவர் - கண்ணீர்
அருவித் துளிகளோ வான்குன்றிலே?

காலம் எழுதும் எழுத்துக்களோ - பிச்சைக்
காரர் இதயத்தின் விம்மல்களோ?
நீலக் கண்ணாடியின் கோட்டையிலே - மின்னல்
நெளிவை இறைத்திட்ட அற்புதமோ?

வெய்யில் அரசாங்கம் வாட்டிடினும் - இருள்
வேலிகட்டி யிங்கு வைத்திடினும்
பொய்யில் தொழிலாளர் எண்ணமெலாம்-அங்குப்
பொங்கிக் குமுறி இறைத்தனவோ?

***

## 2. தாவி எழு!

மாணவ உலகே! விழிப்புக் கொள்; ஆரிய
ஆணவம் மாய ஆர்த்தெழு வாய்நீ!
உன்இனம் “பொன்னினம்” என்ன,உயர்வுற
இன்னே எழு! உன் திறள்தோள் உயர்த்து!
ஆரப்பன் நாட்டில் ஆரியம் திகழ்வது?
தேரப்பா! ஆரியம் வீழ்த்தியே தீரப்பா!

கலையுளங் கொண்ட காளையே! சூழ்ச்சி
வலையை அறுத்தெறி! இதுவே வாழ்நெறி!
போர்ப்பறை முழக்கு! புயலெனச் சீறு!
புல்லர் அஞ்சஉன் வல்லமை காட்டு!
மார்தட்டு, பகைவர் நிலைகெட்டு வீழ!
சீர்கெட்ட மடமை சிதைவுறச் செய்திடு!

திராவிடம் உற்ற சிறுமையைத் தீய்த்திடு!
தூக்குக் கயிறுனைத் தொட்டிழுத் தாலும்
துளியும் அஞ்சாதே! ஒளியிலா நாட்டில்
ஒளியினைப் பாய்ச்சஉன் உயிரையும் ஈவாய்!
எழுக! இளைஞனே, தமிழ் இனம்
தழைக்க இன்றே தாவி எழுந்திடு!

***

## 3. குயில்

குன்றி விழியினில் கோலம் ஏந்தித்
தென்றிசைத் தமிழும் குழலும் யாழும்
சேர்ந்திசைத் தாலெனச் சின்னவாய் திறந்து
ஆர்த்திசைக் கின்றாய் அழகிய குயிலே!

கருப்பிலே அழகு! கண்கவர் கண்கள்!
நறுங்கனி நாவல் விருந்திலே நாட்டம்!
வான நீலத்தில் வாய்ந்ததோர் துளியில்
ஆன மூக்கிலே அற்புத வண்ணம்!

உண்ணும் நாவற் கனிபோல் உன்னுடல்
வண்ணம் வாய்ந்தது! வான்கிளை மீதில்
தொத்தியும் சிறகினைத் தூக்கித் தாவியும்
தித்திப் பாகச் செழுந்தமிழ்ப் பாடித்
தோட்ட மெல்லாம் சுற்றுவாய் விடுதலைப்
பாட்டிலே மண்ணை மயக்குவாய்! பச்சைக்
காட்டிலே உலவும் கவிதையின் குழல் நீ!
ஏட்டிலே காணா இசையின் வெள்ளம் நீ!

உன்குரல் பெண்ணின் குரலுக் கொப்பெனப்
பன்னுவர் கவிஞர், பாதிதான் உண்மை!
பெண்களின் குரலிலே பிணியும் ஏக்கமும்
பண்ணிலாச் சோகமும் பயமும் அடிமையும்

நிறைந்தன ஆதலால் நேரிசைக் குரலிலே
கறையே அமைந்தது! கவின்குயிலே, உன்

விடுதலைக் குரலிலே வெற்றிஏக் காளம்!
நடுங்கும் பெண்களின் நற்குரல் தன்னிலே
விடுதலை யிசையும் வீரமும் இல்லையே!
கெடுதலைச் செய்தனர் ஆணினக் கிறுக்கர்!
கூவுவாய்க் குயிலே 'குவலயத் தினி மேல்
மேவும் சமநிலை மேவிடும்' என்றே!

***

## 4. பொதுவுடைமைப் பொங்கல்!

செஞ்கரும்பு போல்வளர்ந்த செந்நெல் அதன்
தெள்ளரிசி யோடுசுவை சர்க்கரையும் பாலும்
பொங்குதுபார் வெண்ணிலவைப் போலே - உணர்வு
பொங்கியெழும் உழவர்குலம் வாழிய இக் காலே!

சிங்கஉடல் கொண்டதொழி லாளர் எட்டுத்
திக்கினிலும் வெற்றிகொள பொங்குகவே பொங்கல்!
தங்குதடை இல்லைஇனி மேலே நம் தாயகத்தில்
பொங்குகவே பொதுவுடைமைப் பாலே!

***

## 5. தமிழனே கேள்!

தமிழனே நான் உலகின் சொந்தக் காரன்
தனிமுறையில் நான்உனக்குப் புதிய சொத்து!
அமிழ்தான கவிதைபல அளிக்க வந்தேன்
அவ்வழியில் உனைத்திருத்த ஓடி வந்தேன்!
இமைதிறந்து பார்! விழியை அகல மாக்கு!
என்கவிதைப் பிரகடனம் உலக மெங்கும்
திமுதிமென எழுகின்ற புரட்சி காட்டும்!
சிந்தனைக்கு விருந்தாகும் உண்ண வாநீ!
காக்கையென ஒற்றுமையாய்ச் சேர்ந்து நிற்போம்
கடிநாயின் வேற்றுமைகள் அகல வைப்போம்
பூக்காத இளமலரா யிருந்த காலம்
போயிற்று! பருவத்தால் மலர்ந்து விட்டோம்!
தேக்கிலைப்போல் காதுடைய யானைக் கூட்டத்
திரள்போன்று புறப்படுவோம்! புரட்சி நாளின்
ஆக்கத்தில் நமக்கின்று பங்கு வேண்டும்
அல்லவெனில் நாமென்ன அடிமை நாயா?

***

## 6. கேளடி காதலி!

யாரடி காத லி கேளடி உன்றன்
ஆசைக்குரியவன் சொல்கிறேன்
பாரடி மானிடச் சாதியை அவர்
பட்டிடுந் துன்பத்தைப் பாரடி!
மாரடித் தேழைகள் மாய்கிறார் - சிலர்
மஞ்சத்தில் உண்டுமே சாய்கிறார்
தேரடி பட்டிடுந்தூளென - தொழில்
செய்பவர் நாளும் துடிக்கிறார்!

அந்தி சிரித்திடும் போதிலே - உன்றன்
ஆசை பிறந்திடும் ஆயினும்
சந்தியில் வீதியின் ஓரத்தில் - ஒரு
சாக்கடையின்புழுப் போலவே
நொந்து நெளிந்திடும் ஏழைகள் - எனை
நோக்கி அழுதனார் காணடி!
எந்தவிதம் இதைச் சொல்லுவேன் - அடி
எவ்விதம் துன்பத்தை ஆற்றுவேன்?
மக்களுக்காக உழைக்கவும் - அவர்
வாழ்விடர் முற்றும் ஒழிக்கவும்
தக்கசெயல் செய எண்ணினேன் - எனைத்
தாவி யழைத்தது தேசமும்!

இக்கருத் தோடுனைக் கேட்கிறேன் - உன்றன்
இன்பம் எதிலுண்டு சொல்லடி?
இக்கணந் தொட்டு நம் ஆசையும்-காதல்
இன்பமும் மக்களின் தொண்டடி!

## 7. வெற்றி முழக்கம்

வேளை வந்தது வேளை - வெற்றி
மேவும் நமது தோளை!
ஊளை யிட்ட நரிகள்-பல
ஊர் திருடிய எலிகள்,
வாளைப் போன்ற நமது - கை
வன்மை கண்டு நடுங்கும்
வேளை வந்தது வேளை - வெற்றி
மேவும் நமது தோளை! கை

மன்னர் முடிகள் உடையும்-ஏழை
மனிதர் முடிகள் உயரும்!
இன்னல் பட்டு நாளும் - பசி
எய்தி உழைத்த தோழர்
சொன்ன படியே நடக்கும் - புது
சுதந்திரங்கள் பிறக்கும்!
முன்னேறுவோம் இவ்வேளை-வெற்றி
முத்த மிடும்நம் தோளை!

***

## 8. மாளிகை அமைப்போம்!

வயல்களிலே மகிழ்ச்சிதனை விளைய வைப்போம்!
வைகைதனைக், காவிரியை, பொருநை தன்னை
மயலூட்டும் அமுதநீர்க் கடல்க ளாக
மாற்றிடுவோம் நமதுபுகழ் கோபுரத்தில்
புயலிடிகள் வீழாது தடுப்ப தற்கு
புத்தியெனும் விசைக்கருவி அமைப்போம், வாரீர்!
அயலொதுங்கி நிற்காதீர் விளைந்த பின்னர்
அறுத்திடலாம் என்றெண்ணித் தூங்கி டாதீர்!

வையகத்து மாளிகையில் பளிங்கு வாசல்!
வருகின்ற யாவரையும் வரவேற்போம், நாம்!
“கையகலம்; என்வீடு; நானி ருக்கும்
காற்றில்லா அறையேஎன் உலகம்” என்ற
பொய்ப்புளுகு தரித்திரத்தைக் கழுகு தின்னப்
புதுஉலக மாளிகையை அமைப்போம் வாரீர்!
மெய்வாழும் பொதுவுடைமை நீதி வாழும்!
மிடியில்லை என்றகொடி பறக்கும் வீடு!

***

## 9. புதுக் குரல்

எங்கும் புதுக்குரல் சங்க மிசைக்குது!
எண்ணிய காரியம் மண்ணில் நடக்குது!
குப்பையில் கோபுர சிற்பம் முளைக்குது,
கொத்தடி மைத்தொழில் செத்துக் கிடக்குது!

யுத்த வெறிக்குரல் செத்துப் பிறக்குது;
உண்மைபலம் மக்கள் கையி லிருக்குது!
சொத்து, சுகம், சமம்ஆக நெருங்குது;
தொல்லை யிருந்திடும் எல்லை சுருங்குது!

மேற்குப் பனிப்புயல் காய்ச்சல் விளைக்குது,
மிஞ்சும் அணுகுண்டு நெஞ்சு கொதிக்குது!
தீர்க்க மருந்துகள் சேர்க்கும் சிறப்பொளி
செங்கதிர் போலெழுந் தெங்கும் நிலைக்குது!

எதிரில் வரும்புது வாழ்வு திதிக்குது,
ஏழை முகம், வரவேற்க மினுக்குது!
கதிர்கள் அறுத்திடும் காலம் இதிற், பலன்
காண நமக்கொரு வாய்ப்பு மிருக்குது!

கந்தல் உடுத்திய கந்தன் மகிழ்கிறான்
கண்ணை உயர்த்தி இவ் விண்ணை அளக்கிறான்
வெந்திடு வாழ்வினில் ஊற்றுப் புதுமழை
வேகம் தாய்முகில் வந்து குவியுது!

நீலக் கடல்தொடு வானம் அனைத்தையும்
நெஞ்சு மகிழ்வுடன் கொஞ்ச அழைக்குது!

கோல மழித்திடும் யுத்தமெனிற், சினம்
கொண்டு சமாதானத் தொண்டு நினைக்குது!
நித்திரை யிற்புது நேயக் கனவுகள்
நீண்டு மகிழ்ச்சியைத் தூண்டி எழுப்பினள்
சத்திய தேவதை நர்த்தன மிட்டனள்
சர்வ தேசிய சங்கீதம் ஒலிக்கவே!

***

## 10. மே தினமே வருக

கோழிக்கு முன்னெழுந்து கொத்தடிமை போலுழைத்துப்
பாடுபட்ட ஏழைமுகம் பார்த்துப் பதைபதைத்துக்
கண்ணீர் துடைக்கவந்த காலமே நீ வருக!

மண்ணை, இரும்பை மரத்தைப் பொருளாக்கி
விண்ணில் மழையிறக்கி மேதினிக்கு நீர்பாய்ச்சி
வாழ்க்கைப் பயிரிட்டு வாழ்ந்த தொழிலாளி
கையில் விலங்கிட்டு காலமெலாம் கொள்ளையிட்ட
பொய்யர் குலம்நடுங்கப் பொங்கிவந்த மேதினமே!
மன்னர் முடிதரித்த நாட்கள் மடிந்தனகாண்!
மின்னாய் எரியுற்ற மீனாய் விழுந்தனகாண்!
நாதம் கிளர்ந்துலகை நாள்முழுதும் ஆட்டிவைத்த
வேதம் பெயர்மழுங்கி வெற்றுடலாய் ஆனதுகாண்!
ஆனால்
ஏழைத் தொழிலாளர் ஏற்றிவைத்த தீபத்தில்
நின்னுடைய நாமம் நிலைத்ததுகாண் இவ்வுலகில்!
அமுதனையாய் அன்னாய் அருகுற்றாய் இந்நாள்
சமுதாயப் பந்தரிலே சந்திப்போம் வாராய் நீ!

மண்குளிரும் மக்கள் மனங்களிரும், அன்னவர்தம்
கண்குளிரும், ஆனந்த வெள்ளம் கரைபுரளும்!

காவியத்தில் பார்த்ததில்லை, கண்டறியா ஓர்புதுமை!
சோவியத்தில் இன்று சுடர்மணிப்பொன் மாளிகையில்
ஏற்றிவைத்தார் உன்னை இசைந்தமலர் மாலைகளால்
சாற்றிவைத்தார் இன்பம் சமைத்துவைத்தார் எவ்விடத்தும்!

காரிருளை வென்று கலிதீர்க்க மேலெழுந்த
சூரியன்போல் மாமதிபோல் வையகத்தைச் சுற்றிவரும்
மேதினமே நீவருவாய் மின்னல் ரதமேறி
ஊதினோம் எக்காளம் உன்னை வரவேற்க!
வெள்ளமே நீ வருக! மேற்குப் பனித்திரையில்
கொள்ளைக் கொலைநடத்தக் கூட்டணிகள் கூட்டுபர்
மூடு திரைகிழித்து முன்னேறி வந்திடுக!
தேடும் வழித்துணையே தீபமே நீவருக!

'காடு நகராச்சு; காலம் பவுனாச்சு;
வீடு கலையகமாய் விண்ணகமாய் மின்னிற்று!'
தொழிலாளர் சாதனையைத் தூக்கிக் கொடிபிடித்து
வாராய் மணிவிளக்கே வந்திடுவாய் மேதினமே!

யுத்த ஒலி கேட்கிறது, ஊர்மிரட்ட எண்ணுபவர்
பித்தம் அணுகுண்டாய்ப் பேயாய் அலைகிறது;
ரத்த வெறிபிடித்த லாப அரக்கர்களின்
கத்தி, மனிதர் கழுத்தறுக்க நீள்கிறது!
இந்த இருட்டுலகை எற்றிக் கவிழ்த்திட நீ
வந்தாய் வருகின்றாய் வாழ்க்கையெனுந் தேரேறி!

நீல நெடுந்திரையாய் நீள்கின்ற கைகளினால்
ஞாலத் தொழிலாளர் நல்லரசைத் தோற்றுவிப்போம்
என்ற சபதமொடும் எண்ணரிய வேகமொடும்
குன்றா உறுதியொடும் கொள்கையோடும் நீ வருக!

புனிதமே! புத்துணர்வே! அன்பே! புதுமையே!
மனிதரெலாம் நின்நாமம் வாழ்த்தி வரவேற்க
ட்ரூமன், ஷுமன், மார்ஷல், சர்ச்சில்எனும்சண்டாளர்
வெந்து மனம்புழுங்கி வேதனையில் மூழ்கிட்டார்
வந்தாய் அவர்நெஞ்சை வாள்கொண் டறுத்தெறிய!

முன்னை இருள்கிழித்து முத்தமிட்டாய் இத்தரையை
அன்னை உலகிற்கோர் ஆதரவு நீதந்தாய்!
தூங்கும் குழந்தைக்குத் தொட்டிலென வந்தாய் நீ
ஏங்கும் அகதிக்கோர் இன்பமென நின்றாய் நீ!
உன்னை வரவேற்க ஒவ்வொருவர் இல்லத்தும்
மின்னைப் பரப்பியவோர் மேடைபோல் எத்திசையும்
காற்றில் அணையாமல் காலத்தால் மாளாமல்
ஏற்றிவைத்த நாள்விளக்கின் தீபம் எழில்பரப்ப
வருகநன் னாளென்று வாழ்த்தொலிகள் பொங்கத்
தெருவில் தொழிலாளர் சிம்மக்குரல் எடுத்து
நின்னாமம் உச்சரிக்க நின்றார் அணியணியாய்
பொன்னாமம் வையம் புகழ்நாமம் நின்னாமம்!

ஆலையின் பக்கம் அணிபெற்ற மைதானம்;
சோலைப் பறவைகளாய்ச் சூழ்ந்த தொழிலாளர்
ஊர்வலமோ வெள்ளம் ஒருகடலின் நெடுங்கைகள்!
தேர் ஏறிவந்து திசையெங்கும் பாராய்நீ!

மாணவர்தம் சங்கத்து மாடிமிசை நின்வருகை
ஏற்க விரிகின்ற கைகள் கடலலையோ!
நீடு குயில்மொழிசேர் மாணவிகள் நெஞ்சுருகப்
பாடுகிறார், நானும் பறவையைப்போல் ஆகிவிட்டேன்!
ஆலைத் தொழிலாளி அன்புமகன் ஓடிவந்து
சோலைப் பறவையெலாம் சொன்னது போல் சொல்லி
வயிற்றுப் பசிமறந்து வாழ்த்துகிறான் உன்பெயரை;
பயில்கின்ற இவ்வுலகப் பாட்டும் நீ! பண்பும் நீ!

தாழ்வைத் தகர்க்கத் தலைநிமிர்ந்த மேதினியில்
வாழ்வின் சமாதானம் வாய்ந்த நெடுந்திரையில்
ஜீவியமாய் நின்றதொரு சித்திரம்நீ; வானமரர்
காவியம் நீ; கற்பனை நீ; காணுமொரு காட்சியும் நீ!

தீரா இருளொழிந்து திக்கு விளங்க இதோ
வாராய் வளர்பொருளே மேதினமே வாராய் நீ!

வெட்டுகின்ற மின்னொளிபோல் வீறிட்ட காற்றதுபோல்
சட்டச் சுவர்மீது தாவிப்போய் விண்முகட்டின்
மேலே உனது கொடி வீசிப் பறந்து, புயல்
போலே எமக்குப் புதுச்செய்தி சாற்றியது

நாசக் கிருமிகளாய் ஞாலப் பெருநோயாய்
வாசம் புரிகின்ற 'வால் தெரு'வின் மூடருக்குக்
'காலத் திறுதியாக காண்' என்று செங்கொடியை
ஞாலத் தெருமுனையில் நாட்டுகின்றாய் வானுயர!

ஒல்லொலியாய்ப் பொங்கிடநின் காலடியின் ஒசையொடு
செல்கிறது செஞ்சேனை நாலுதிசை முழுதும்!
நீக்ரோவர் தம்முடைய நீள்கரத்தால் நல்லுளத்தால்
சீன இளைஞர்க்குத் தின்பண்டம் போலினிய
வாழ்த்தை அனுப்புகிறார் உன்னுடைய வண்டியிலே!
வாழ்த்தொலியால் மண்ணின் வசையின்று நீங்காதோ!

வானத் தரசியென வாகாய் வளர்கின்ற
சீனப் பெண்தந்த திருவாழ்த்தை ஏந்தி - வந்து
என்னெதிரே நீட்டி எகத்தாளம் போடுகிறாய்
பொன்னே! புதுமலரே! புத்தொளியே! வாழியநீ!
சோலைக் குயில் வந்து சொல்லிற்று நின்பெருமை!
ஆலைசங்கு நின்பெயரை ஆகாய வீதியிலே

முழக்கிக் கிடுகிடுக்க மூச்சுவிட்டு நிற்கிறது
உழைக்கின்ற தோழர் உணர்ச்சியே நீ வருக

கூட்டங்கள் கூட்டிடுவார் கும்பல் பெருக்கிடுவார்
'ஆ' என்பார் 'ஊ' என்பார் ஆயிடினும் சிப்பாய்கள்
கூடி தடியெடுத்தால் கும்பிட்டுப் போய்விடுவார்!
உன்னுடைய கூட்டமிந்த ஓட்டைக் கழிசடைகள்
நாணித் தலைகுனிய இராணுவமாய் முன்னேறி
ஆயுதங்கள் தம்விழியும் அஞ்ச நகைக்குமொலி
ஞாலம் வெடித்துவிட்ட நாதமெனப் பாய்கிறது!
காலன் நடுங்கக் காலமே நீ வருக!

துறந்தார் சுகமுழுதும்; தோள் கொடுத்தார் நின்பணியில்;
இறந்திட்ட எம்தோழர் இன்றைக் குயிர்பெறுவார்!
சுடுகாடும் நின்வரவால் சொர்க்கமாய் மாறாதோ!
தொடுகின்றாய் நின்கையால் தொட்டதெலாம் பூக்காதோ

பொந்தில் உயிர்வாழ்ந்தார்; போக்கற்றார்; இன்பமிலார்:
கந்தல் மனிதரவர் கையில் அதிகாரம்
ஏற்றிவைத்த நின்பெருமை என்னுயிர்க்கும் மேலன்றோ!
போற்றினேன் வையப் புரட்சியொடு நீவருக!

பொன்னார் நிறமுடையாள் பூவின் மணமுடையாள்
என்னருமைக் காதல் எழிலரசி நின்பெயரை
உச்சரிப்பாள்; அன்பால் உபசரிப்பாள் ஆகையினால்
எச்சரிக்கை இல்லில் இருந்து விருந்தருந்து !
காதலர் தம் இல்லில் கணநேரம் தங்கிவிடில்
போதம் பெறுவரவர் போர்வீரர் ஆயிடுவர்!

அமெரிக்க மாநகரில் அன்றொருநாள் மக்கள்
குமுறி யெழுந்து குருதியெலாம் சிந்தியதால்

வான்சிவந்து மண்சிவந்து மாகடலும் தான்சிவந்து
ஊன்சி வந்து வந்தாய் உயிர்சிவந்த செந்தினமே!

உன் கொடியைப் போற்ற உயிர்விட்டார் அந்நாளில்,
வன்கொடியர் மாய வழிகண்டா ராதலினால்
வாழ்கின்றார் இன்றும்; வளர்கின்றார்
நாள்முழுதும், சூழ்கின்றார்
வானில், சுடர்கின்றார் நீவருக!

கண்ணின் கருமணியே, காசினிக்கு மாமணியே,
கண்ணீர் துடைக்கவரும் காலமே நீ வருக!
அன்னை ஒருத்தியதோ அங்கே நெடுந்தொலைவில்
தன்மகனைத் தூக்கேற்றிக் கொல்லும் சதிகாரர்
வஞ்சமெண்ணி அஞ்சுகிறாள் வாராய் மணிவிளக்கே!
அன்னவள்தன் நெஞ்சத்தின் ஆறுதலே வாராய்நீ!
தூக்குக் கயிறுதனைத் துச்சமென எண்ணுமகன்
கண்ணில், உளத்தில் களிப்பேற்ற வாராய் நீ!

உலகத் தொழிலாளர் ஒற்றுமையே,நல்லுணர்வே,
அன்பே, இருட்கடலின் ஆழத்திருந்து வந்த
முத்தே, முழுநிலவே, மேதினமே வாராய் நீ!
வாராய் உனக்கென்றன் வாழ்த்தை யிசைக்கின்றேன்!

***

## 11. தமிழ்நாடு

புதுமை கண்டு வாழ இன்று
போர் செயுந் தமிழ்நாடு மறப்
போர் செயுந் தமிழ்நாடு மிக
முதுமை கொண்ட பழமை வீழ
மோதிடும் தமிழ்நாடு வீழ
மோதிடும் தமிழ்நாடு!
திசையை, விண்ணை வென்று நின்று
சிரித்திடும் தமிழ்நாடு - எழில்
சிரித்திடுந் தமிழ்நாடு கொடி
அசைய உயர மண்ணில் நிற்கும்
கோபுரம் தமிழ்நாடு - கலைக்
கோபுரம் தமிழ்நாடு!

காவிரிநதி பாயுங் கழனிக்
கண்ணொளி பெறும்நாடு முக்
கண்ணொளி பெறும்நாடு பொழில்
பூவிரிநறும் புனல்வி ரிந்திடும்
பூங்கொடி தவழ்நாடு - தமிழ்ப்
பூங்கொடி தவழ்நாடு!

கைகள் வளையின் ஒலியும் அலையும்
கவிதை பேசும்நாடு - நற்
கவிதை பேசும்நாடு - நம்
கைகள் தழுவிக் காதல் புரியக்
கன்னியர் வளர்நாடு - இளங்
கன்னியர் வளர்நாடு!

அலையும் சிலம்பின் இசையும் மலரும்
அவிழ்ந்திடும் தமிழ்நாடு - மலர்

அவிழ்ந்திடும் தமிழ்நாடு - பனி
மலையும் பொதிய மலையும் உறவில்
பொங்கிய தமிழ்நாடு மணம்
பொங்கிய தமிழ்நாடு!

கிளி யினோடு பழகுங் காதல்
கிளிகள் பேசும் நாடு - பெண்
கிளிகள் பேசும் நாடு - புவி
வெளியில் நடனம் பயிலும் அலையின்
நாதம் பொங்கும் நாடு - கடல்
நாதம் பொங்கும் நாடு!

கம்பன் தந்த அமுத முண்டு
களித்திடுந் தமிழ்நாடு - உளங்
களித்திடுந் தமிழ்நாடு - பசுங்
கொம்பர்மீது குயில்கள் கவிதை
கொஞ்சிடுந் தமிழ்நாடு - இசை
கொஞ்சிடுந் தமிழ்நாடு!
காலம் என்ற கடலின் மீது
கப்பலோட்டும் நாடு - புகழ்க்
கப்பலோட்டும் நாடு - இந்த
ஞால மென்ற மேடை கண்ட
நாடகத் தமிழ்நாடு
ஒரு நாடகத் தமிழ்நாடு!

உப்பு விளையும் முத்து விளையும்
உணவு விளையும் நாடு - நல்
உணவு விளையும் நாடு - ஓர்
ஒப்பி லாத உரிமை கொண்ட
உணர்வு விளையும் நாடு - தமிழ்
உணர்வு விளையும் நாடு!

***

## 12. “ஜனசக்தி வாராய்!”

பொங்கு கடல் ஓசைநிகர் சங்கொலி முழங்க
போதமொடு நாலுதிசை பேரிகை வழங்க,
சங்கமொடு மக்களொடு ‘ஜனசக்தி’ வாராய்,
தாளமொடு மேளமொடு வரவேற்க வந்தோம்!

நாட்டுக்கு நல்லுண்மை நாட்டநீ வாராய்;
நலிவுதரும் வேற்றுமைகள் நைந்தொழிய இன்று
வீட்டுக்கோர் கொடியேற்றி விடுதலையைக் கோரி
விண்மோதும் நாதமொடு வேகமொடு வாராய்!

பொய், புளுகுப் பத்திரிகை நரிக்கூட்டம் அஞ்சிப்
புதரூடு போகஒரு சிங்கமென வாராய்;
மெய்வளர, நன்மையொடு மேன்மைபெற வாராய்
வெற்றிபெற எம்முள்ள வேட்கை நீ வாராய்!

உழைப்போர்தம் கையுற்ற ஊன்றுகோல் வாராய்;
உண்மைதனைக் காண்கின்ற தீபம் நீ வாராய்;
அழைப்பிதழே ! அன்புரையே! அழகுமலர் ஏடே!
ஐக்கியமே! முன்னணியே ஆதரவே வாராய்!

வான்மழைக்குக் கையந்தி நின்றபயிர் போன்று
வாசலில் காத்திருந்தோம் வாராயோ என்று: தேன்
மழையே! செய்தி தரும் சித்திரமே! இன்று
செந்தமிழர் இல்லத்தில் விருந்தாக வாராய்!

வயலிடையே நின்வருகை ஆனந்தம் சேர்க்கும்
வான்முட்டும் ஆலைகளும் வருகையெதிர் பார்க்கும்;
ஜெயங்கொண்ட மக்களணி எக்காள மூதும்
தினமெங்கள் வீட்டிற்கு ‘ஜனசக்தி’ வாராய்!

பஞ்சாங்கம் பார்த்தநாள் மலையேறிப் போச்சு!
பாய்கின்ற ஜனசக்தி முழக்கமிட லாச்சு
நெஞ்சேநீ ஆனந்தக் கூத்தாடு கின்றாய்
“நேர்வருக ஜனசக்தி பேர்வருக!” என்றே!

***

## 13. எவரெஸ்ட் பிடிபட்டது

விண்மீது மோதுகின்ற
வெற்புமுடி ‘எவரெஸ்ட்’
பெண்ணரசி தேவமகள்,
பேருலகில் மானிடரைக்
கண்காட்டி ஏமாற்றிக்
கைப்பிடியிற் சிக்காமல்
மண்காட்டிக் கைலாய
வான்காட்டிக் கொக்கரித்தாள்!

எட்டிப் பிடிக்கவந்த
எத்தனையோ ஆடவரைத்
தட்டி உருட்டியவள்,
தாவிமிகக் கூவியவள்,
கட்டிப் பிடிப்போரைக்
காலனுல கேற்றியவள்,
பட்டிமகள் சிக்கிவிட்டாள்,
பாருலகே, காணாய்நீ!

மண்ணுலகில் மானிடரின்
மகிமைக்கோர் சாட்சியமாய்,
விண்ணுலகின் உச்சியிலே

வெற்றிக் கொடிபறக்கும்!
கண்ணே! பெருந்திசையே!
கார்க்கடலே! வானகமே
மண்ணே! எவரெஸ்டை
மனிதன் பிடித்துவிட்டான்!

'எட்டா எவரெஸ்டை
எட்டிவிட்டோம்' என்றென்று
கொட்டிடுக வான்முரசம்!
கூறிடுக வாழ்த்தொலிகள்!
தட்டிடுக வான்முகட்டைத்!
தாவிடுக அந்தரமேல்!
தொட்டிடுக வெண்மதியைத்
தோள்கொட்டி ஆடிடுக!

***

## 14. புனல் மகள்

தனந் தன மெனப் புனல்மகள்
நடமாடுவாள் - தகித்
தகிங்கிணம் கிணம் கிணமெனநடை
தத்தித் தளாங்கு கறைஇரு புடை

தனந்தனமெனப்

வனந் தரும்குளிர் நிழலிடை
எழில் மிஞ்சி - கை
வளை யொலியொடு கொஞ்சி
வரும் வஞ்சி

தனந்தனமெனப்

தனந் தனத் தனம்
தகிங் கிணத் தனம்

தகிதி தத்தம்
தத்த தந்தமெனத்
தாம் தாமெனும்
தரங் கங்களொடு
தனந்தனமெனப்

கலகலவென கால்வாய்களிற்
காற்சிலம்பொடும் ஓடி - விழி
கவர்ந்திடும் இடம் தேடி
சலசல வெனத் தமிழ்தரும் பதம்
தகும் தகுமெனப் பாடி
உளம் கூடி விளை யாடி
தனந்தனமெனப்

***

## 15. வழிப் பயணம்

தோள்க னக்குது சுமைக னக்குது
தொல்லை வழிப்பயணம்! - இது
தொல்லை வழிப்பயணம்!
நாள்க னக்குது நடைக னக்குது
நைந்த வழிப்பயணம் - இது
நைந்த வழிப்பயணம்!

கால் கடுக்குது கை கடுக்குது
கைத்த வழிப்பயணம் - இடர்
தைத்த வழிப்பயணம்!
மேல் கடுக்குது வெயில் முடுக்குது
வெற்று வழிப்பயணம் - இது
சுற்று வழிப்பயணம்!

பள்ள மிருக்குது பாதை சறுக்குது
பார வழிப்பயணம் - பெரும்
பார வழிப்பயணம்!
உள்ள மிருக்குது துள்ளி நடந்திட
ஒற்றை வழிப்பயணம் - ஓர்
ஒற்றை வழிப்பயணம்!
தேகம் நடுங்குது வேகம் ஒடுங்குது
தேச வழிப்பயணம்! - இது
தேச வழிப்பயணம்!
காக மிறங்குது கழுகு சுற்றுது
காட்டு வழிப்பயணம்! - இடு
காட்டு வழிப்பயணம்!
நேரம் கிடக்குது தூரம் கிடக்குது
நீண்ட வழிப்பயணம்! - இது
நீண்ட வழிப்பயணம்!
பாரம் நெருங்குது பாதை சறுக்குது
கெட்ட வழிப்பயணம் - கடன்
பட்ட வழிப்பயணம்!

போது குறுகுது போதை பெருகுது
போகும் வழிப்பயணம்! - உயிர்
போகும் வழிப்பயணம்!
வாது பெருகுது வம்பு வருகுது
வாழ்க்கை வழிப்பயணம்! - இது
வாழ்க்கை வழிப்பயணம்!

***

## 16. நிலா

பூட்டிய வீட்டைத் திறந்து குடும்பப்
புகழ்விளக் கேற்றிடவே - சுடர்
தீட்டப் புகுந்த புதுமணப் பெண்ணனத்
தென்படும் வட்டநிலா - கண்
முன்படும் வட்டநிலா!

தன்னந் தனிமையில் பெண்வரும் சாயலில்
தத்தும் நடைநடந்தே - இரு
கன்னங் கனிந்திடக் காதல் பிறந்திடக்
காணுது வட்டநிலா - சற்று
நாணுது வட்டநிலா!

'ஓங்கு முகில்ரதம் ஏறி வருகின்ற
ஊர்வசி யேவருக!' - என
வேய்ங்குழல் கொண்டு வருகின்ற காதலை
வேண்டுது வட்டநிலா - மலை
தாண்டுது வட்டநிலா!

***

# 17. கவிஞன்

மோனக் கருக்கலிலே - விண்
முத்தொளி தோன்றுகையில்
வானக் கடல்கடந்தே - அதை
வாங்கிவர விரைவேன்!

முத்துப் பனித்துளியில் - கதிர்
முத்த மளிக்கையிலே
பித்துக் கவிபுனைந்தே - மணம்
பேசி மகிழ்ந்திடுவேன்!
சாயும் கதிர்களிலே - இருட்
சாலம் புரிகையிலே
காயும் நிலவெனவே - வழி
காட்ட எழுந்திடுவேன்!

நீலக் கடல் அலையில் - கதிர்
நெய்த வலையிடையே
கோலக் குளிர்மணிபோல் - கவி
கொட்டிச் சிரித்திடுவேன்!

ஊரை எழுப்பிடவே - துயர்
ஒன்றை நொறுக்கிடவே
தாரை முழக்கிடுவேன் - தமிழ்ச்
சாதி விழித்திடவே!

கத்தி முனைதனிலே - பயங்
காட்டும் உலகினிலே
சத்தியப் பேரிகையை - நான்
தட்டி முழக்கிடுவேன்!

***

## 18. வருங்கால மனிதன் வருக!

புத்தர் நடந்த திசையிலே - அருள்
பொங்கி வழிந்த திசையிலே
சித்தம் மகிழ்ந்து நடந்திட - ஒரு
தெய்வ மனிதன் வருகிறான்!

விண்ணிற் பிறந்தவன் என்றிட - முகம்
விண்சுட ராகப் பொலிவுற
மண்ணிற் பிறந்த மனிதருள் - புது
மைந்தன் பிறந்து வருகிறான்!
மன்னன் அசோகனும் காந்தியும் - திரு
வள்ளுவன் என்றவே தாந்தியும்
சொன்ன படிக்கு நடந்திடப் - பரி
சுத்த மனிதன் வருகிறான்!

சொல்லும் செயலும் ஒரு தொழில் - எனும்
தொன்மை நெறியைத் தொடர்ந்திடக்
கல்லும் உருகும் கருணையை - இரு
கண்ணெனக் கொண்டு நடந்திட,

நல்ல மனிதன் வருகிறான் - தமிழ்
நாட்டு மனிதன் வருகிறான்!
வல்லமை கொண்டு வளர்ந்திடப் - புவி
வாழ்ந்திடச் செய்ய வருகிறான்!

மண்மிசை அன்பை விதைத்திடில் - அது
மாமர மாகிக் கனிதரும்!
உண்ண மரணம் ஒழிந்திடும் - என

ஓதும் மனிதன் வருகிறான்!
பள்ளமும் மேடும் குறுக்கிடில் - இசை
பாடி நடந்து கடப்பவன்!
கள்ளமும் வஞ்சமும் கண்டிடில் - இரு
கால்களில் எற்றிப் புடைப்பவன்!

நற்கலை கற்றுத் தெளிபவன் - தமிழ்
நாட்டை உயர்த்தும் மனிதனாம்!
பொற்சுடராகப் பொலிவுற - இந்தப்
புண்ணிய மைந்தன் வருகிறான்!

***

## 19. புதுமைப் பித்தன்

பித்தன் எனத்தன் பெயர்கொண்டு வந்த
பெரியவன் இவனை அறிவீர்!
அத்தன் அமரன் அமுதொத்த சொல்லன்
அறிஞன் இவனை அறிவீர்!

உரைகெட் டிருந்த உணர்வற் றிருந்த
சிறையுற் றிருந்த தமிழில்,
கரைதத்தி வந்த பெருவெள்ள மென்னக்
கதை கொண்டு வந்த மைந்தன்!

இடர்வந் தெதிர்க்க எதிர்கொண் டடித்த
இணையற்ற வயிர நெஞ்சன்!
கடல் என்ற புலமை அலைகொண் டெறியக்
கவிமுத் தணிந்த கவிஞன்!

***

## 20. வேறு

சின்னவர் வஞ்சகர் சீர்கெட்ட மூடர்கள்
சீய்த்துக் கிடந்த தமிழில்,
மன்னவன் செந்தமிழ் மணிவாச கக்கடல்
மாதவம் என்ன வந்தான்!

பித்தன்என் றார்சிலர், பேயன்என் றார்சிலர்
பிரமன்என் றாரு முளரால்!
சித்தம் தெளிந்தவர் தெரிந்தனர்! செந்தமிழ்ச்
செய்தவச் செல்வன் என்றே!

அருளோடு வந்த ஒளி அணையாச் சுடர்மொழி
ஆக்கிப் படைத்த அறிஞன்!
இருளோடு வந்துமண் ணிருளோடு முழல் பவர்
இருந்திட மறைந்த தென்னே?
வறுமைக்கு வாழ்க்கையை பலியிட்ட வள்ளலை
வந்தாத ரிக்காதவர்,
சிறுமைக்கு நாணவோ? தேசத்து மாந்தரின்
செய்கைக்கு நாண முறவோ?

நாணுளோ மாயினும் நம்பிக்கை மாய்ந்திலோம்
நாளுமவன் கலையின் ஒளியைக்
காணுவோம், அவன்கலை காட்டிய நெறியினைக்
கருத்தினில் கொண்டு வளர்வோம்!

***

## 21. உரிமை முரசு

கட்டிய ஆடையிற் பட்ட அழுக்கைக்
கழுவி வெளித்தோமே - பனி
சொட்டிய கார்இருள் மத்தியில் நின்று
துணியை வெளுத்தோமே!

ஒட்டும் வயிற்றில் உணவில்லை யாயினும்
ஊருக் குழைத்தோம் - இதை
எட்டுத் திசைகளில் கொட்டு முரசொலி
கொட்டி யுரைப்போமே!

பட்டினி லாடை வெளுத்தும் பரம்பரைப்
பஞ்சம் ஒடுங்கவில்லை - பலர்
கட்டும் பஞ்சாடை வெளுத்தும் தினந்தொறும்
கஷ்டம் அடங்கவில்லை!

“கெட்டுக் கிடந்தது போதும்“ எனக்குரல்
கேட்டு விழித்தெழுந்தோம் - திசை
எட்டும் அதிர்ந்திடக் கொட்டிடும் பேரிகை
கொட்டி யுரைப்போமே!

***

## 22. தென்மகள் வருகின்றாள்!

பூவிரி சோலைகள் யாவும் வணங்கப்
பொன்மலர் தான்சசிந்தக்
காவிரி அன்னை வருகின்றாள் பொற்
கழல் 'கலகல' வென்றே!
சேயெனும் நன்செய்ப் பயிர்கள் அழைக்க
சேலெனும் விழிமகிழத்
தாயெனும் காவிரி வருகின்றாள் அலை
"சலசல சல" வென்றே!

பூந்துகில் சுற்றிப் பொற்கரை யிட்டுப்
புன்னகை தான்சிந்தித்
தீந்தமிழ் பாடித் திரையொடும் ஆடித்
தென்மகள் வருகின்றாள்!

செந்தமிழ் வாணர் சிந்தை களிக்கத்
தெண்டிரை பரிசேந்தி
வந்தனள் அன்னை செந்தமிழ் நாடு
வளம் 'வளர் வளர்' கென்றே!

***

## 23. எண்ணம்

மேக ரதத்தினில்
ஏறிடவும் ஒரு
மின்னலென உரு
மாறிடவும்,

சோகக் குமுறல்
இடித்திடவும் விழி
சொட்டுங்க(ண்)ணீர் மழை
விட்டிடவும்,
காட்டு மலரெனப்
பூத்திடவும் வருங்
காற்றினில் ஆனந்தக்
கூத்திடவும்,

பாட்டு மயக்கினில்
ஆழ்ந்திடவும் எழிற்
பாவை முயக்கினில்
வீழ்ந்திடவும்,

வானக் கருக்கலில்
நீந்திடவும் முகில்
வர்ணக் கலப்பினிற்
சேர்ந்திடவும்,

ஈனக் கவலையை
ஏற்றிடவும் மனம்
எண்ணிப் பெருந்தொலை
சுற்றிடுதே!

***

## 24. வள்ளைப் பாட்டு

'தந்த தனத்தனம்'
என்று குற்றுங்களே!
தண்டமிழ்ப் பொங்கல்விழா! சென்று
தட்டுங்கள் ஞானமுழா! - கதிர்
வந்த வழிதொறும்
வாங்கி உலக்கையை
வாழ்த்திநெற் குற்றுங்களே - முடி
தாழ்த்திநெற் குற்றுங்களே!

கொண்டை குலுங்கிடக்
குற்றுங்கள் நெல்மணி
கொஞ்சிடும் பொங்கல்விழா! - சென்று
கொட்டுங்கள் ஞானமுழா! - விழி
கெண்டை குதித்துக்
கிடக்குது பாற்குடக்
கேணியிற் பாருங்களே! - அது
கேட்டது தாருங்களே!

ஓச்சுந் தொறும்வளை
பேச்சுக் கொடுத்திட
ஓங்கிநெற் குற்றுங்களே! - இடை
ஏங்கிநெற் குற்றுங்களே! - பொழு
தாச்சு! விழுந்திருள்
போர்த்த வருகுது
பார்த்துநெற் குற்றுங்களே! - கை
சேர்த்துநெற் குற்றுங்களே!

செய்யில் முளைத்தது
நெய்யில் குளித்திடும்
தித்திக்கக் குற்றுங்களே! - பலன்

சித்திக்கக் குற்றுங்களே! - இரு
கையில் நடஞ்செயக்
கற்ற உலக்கையிற்
காட்டுநெற் குற்றுங்களே! - தமிழ்
நாட்டுநெற் குற்றுங்கள!

***

## 25. கண்ணம்மா

மஞ்சள் கரைத்து விட்டாள் - கண்ணம்மா
மாணிக்க ஓடையிலே!
நெஞ்சங் கரைந்து விட்டேன் மஞ்சளாய்
நீந்திநீ ராடுகிறேன்!
மூழ்கிக் குளித்து விட்டாள் - கண்ணம்மா
முத்துநீர் ஓடையிலே!
தாழ்குழ லில்மல ராய் - அடியேன்
தாவிட நீந்துகிறேன்!

நீரைக் கலக்கி விட்டாள் - கண்ணம்மா
நித்தில ஓடையிலே!
பேரைக் கலக்கி விட்டாள் - அலைகளில்
பேசிநீ ராடுகிறேன்!

சேலை பிழிந்து விட்டாள் - கண்ணம்மா
சித்திர ஓடையிலே!
ஆலை பிழிகரும் பாய் - என்னுளம்
ஆடநீ ராடுகிறேன்!

உள்ளம் எழுதிவிட்டாள் - கண்ணம்மா
ஊற்றுநீ ரோடையிலே!

கள்ளம் அழிந்து விட்டேன் - அடியேன்
காதல் நீ ராடுகிறேன்!

***

## 26.மழை

இடிகொட்டக் கார்முகில்
முடிமுட்ட ஆகாயம்
எங்கும் பெருங்கூட்டம் - வான்
என்ற அரங்காட்டம்!

கைகொட்டக் கார்முகில்
மைதொட்ட நயனத்தி
என்றமின்னற் கொழுந்தாள் - தடம்
இட்டிடறி விழுந்தாள்!
இரைகின்ற ஆர்ப்பாட்டம்!
இருளுக்குக் கொண்டாட்டம்!
என்றுமின்னல் அழுதாள் - கண்
ணீரால் நிலம் உழுதாள்!

***

## 27. சேரன் கூத்து

வில்லெடுத்து நின்றவொரு மறவன் - பசும்
புல்லெடுத்து நின்றமலைக் குறவன் - தமிழ்ச்
சொல்லெடுத்த இசைகொண்டு
துணங்கைக்கூத் தினிற்பண்டு
மகிழ்ந்தான் - உளம் - நெகிழ்ந்தான்!

வெற்பெடுத்து நின்றஇரு தோளான் - பகை
வேங்கையைப் பிளந்தசுடர் வாளான்-மறக்
கற்பெடுத்த கண்ணகிக்குக்
கட்டிய கோயிலுடைய
வீரன் - பழஞ் - சேரன்!
நுங்கெடுத்து நின்றபனம் பூவான் - பகை

நூறிட அதட்டுகின்ற நாவான் - தமிழ்ச்
சங்கெடுத்தெங் கும்முழக்கிச்
சாகரம் எல் லாம்உழக்குந்
தச்சன் மலை - அச்சன்!

சிந்தெடுத்த சந்தம்ஒன்று பாடி - அவன்
செய்தெடுத்த தென்னவொரு மோடி - மலர்ப்
பந்தெடுத் தடிக்கும் பெண்டிர்
பாய்ந்தெடுத் தணைக்குங்கையைத்
தந்தான் சுற்றி வந்தான்!
'தந்தனம் தனத்தந்தன தானா'- என்று
தாண்டித் தாண்டிஆடி னானா? - அவன்
முந்தவும்பிந் தவும்பெண்டிர்
மொய்க்கவும் தைக்கவும்சுற்றி
வந்தான் சுவை தந்தான்!

***

## 28. எண்ணித் துணிந்தேன்

விண்ணைத் தொடமுயன்றேன் - போர்
வித்தை கற்கமுயன்றேன்!
மண்ணைத் தொடும்நிழலில் - மன
மங்கை எனைத்தடுத்தாள்

திங்களை எட்டச் சென்றேன் - மேற்
சென்றுகை கொட்டச் சென்றன்!
மங்கை மனக்கிழத்தி - எனை
மண்ணில் இறக்கிவிட்டாள்!

ஆகாயம் நீந்தச் சென்றோன் - கோள்
ஆயிரம் ஏந்தச்சென்றேன்!

சாகா மணக்கிழத்தி - எனைத்
தரையில் இறக்கிவிட்டாள்!

புதனைப் பிணிக்கச் சென்றேன் - செவ்வாய்ப்
புத்தி கணிக்கச்சென்றேன்!
பதறி நெடுந்தரையில் - மனப்
பாவை இறக்கிவிட்டாள்!

மண்ணில் முளைத்தவன்நான் - அதன்
மார்பில் திளைத்தவன்நான்!
எண்ணித் துணிந்துவிட்டேன் - இனி
எங்கும் பறந்துசெல்லேன்!

***

## 29. மழைத் துளி

'தந்ததன' மென்று பந்தலில் மலர்ப் பந்தலில்
வந்து விழுந்தது நீர்த்துளி - மழை நீர்த்துளி!

பச்சைப் பசுந்தழைக் காட்டிலே - இலை மேட்டிலே
தைச்சுக் கிடந்தது புன்னகை - மழை மென்னகை!

ஆழியின் உள்மனக் கூட்டிலே - சிப்பி ஓட்டிலே
வாழிய வைகிய முத்துப்போல் - சுடர் வித்துப்போல்

மின்னற் கொடிதந்த மொட்டுப்போல் - ஒரு
பொட்டுப்போல்
கன்னி யிளநகை வண்ணம்போல் - அவள் எண்ணம்போல்
தொற்றும் மழைத்துளி கண்டுநான் மயல் கொண்டுநான்
முற்றுங் களிநடம் ஆடினேன்இசை பாடினேன்!

***

# 30. நிலவைப் பிடித்தார்

நிலவைப் பிடித்துவிட்டார் - அதன்
நெற்றியில் வெற்றிக் கொடியைநட்டார்!
உலகே விழித்தெழுவாய் - திறன்
உன் கையில் இருக்கையில் ஏன் அழுவாய்?

எட்ட இருந்துகொண்டே - புவி
எட்டி எட்டிப்பார்த்த வெண்மதியைத்
தொட்டது செங்கொடியே - ஆ!
தூரம் எலாம்இனி பொடிப் பொடியே!

நேற்றுப் பிறந்ததடா - எனில்
நீதியின் ஆற்றல் சிறந்ததடா
போற்றும் பொதுவுடைமை - அலை
பொங்கிக் கிளர்ந்தது சோவியத்தில்!
மலையின் உடற்பிளந்தார் - வைர
மணிகள் பெரும்படியாய் அளந்தார்!
அலையின் குடற்பிளந்தார் பல்
லாயிரம் விந்தைசெய வளர்ந்தார்!

பாலை நிலத்தினையே - எழிற்
பட்டுடை போர்த்த திருமகளாய்ச்
சோலையாய்த் தேற்றி வைத்தார் - ஒரு
சூத்திரப் பாவையாய் மாற்றிவைத்தார்!

எண்ணெய் வயல்மடுத்தார் - துயர்
ஏழைமை என்றதுயர் தடுத்தார்!
வெண்ணெய், நெய், பால் கொணர்ந்தார் - பசி
வீழ்ந்திட விளைச்சலின் வேல்கொணர்ந்தார்!

வளரும் பொதுவுடைமை - தரும்
வண்மையால்,திண்மையால் இப்புவியைக்
கிளரும் புதுவுலகாய் - அவர்
கீர்த்திக் குறைவிடம் ஆக்கிவைத்தார்!

நிலவைப் பிடித்துவிட்டார் - அதன்
நெற்றியில் வெற்றிக் கொடியை நட்டார்!
உலவவிண் செல்வதற்கே - இவ்
வுலகை அழைக்கின்ற விந்தைதொட்டார்!

காதலர் பார்த்தநிலா - புவி
கற்பனை யாவையும் சேர்த்தநிலா
மோது கடல்அலையைத் - தன்
மோக வெளிசத்தால் ஈர்த்தநிலா!

பாம்பு விழுங்கு மென்றே - பழம்
பஞ்சாங்கக் காரர் பகர்ந்தநிலா
தீம்பிழி நறவம்என - ஒளி
சிந்தித் திகழ்கின்ற வட்டநிலா!

மண்ணவர் கைகளிலே - ஒரு
மாய விளக்கென மாற்றமுறப்
பண்ணினர் உருசியரே - இப்
பாரில் அவர்க்கினி யார்நிகரே!

***

# 31. அந்தரத்தில் மேடை அமைத்தார்

அந்தரத்தில் மேடை அமைத்தார் - அங்கே
அனுப்பிய மின்விசையாற் செய்தி அறிவார்!
தந்திரத்தால் ஆகுவ துண்டோ? ஞானத்
தத்துவத்தால் கற்றுத் தரும் விந்தைகளினால்
மந்திரம்போல் செய்து முடித்தார் - இம்
மண்ணுலகின் பொற்கனவை விண்ணில் வடித்தார்!
சந்திரனைப் பற்றியதன்றி - அதைத்
தாண்டுகின்ற கூண்டுகளும் ஈண்டு புனைந்தார்!

ஆற்றல் தரும் அணுபிளந்தார் - அந்த
ஆற்றலினாற் பேரண்டங்கள் யாவும் அளந்தார்!
போற்றவரும் செயல்இணைத்தார் - இப்
பூமியோடு விண்ணுலகை ஒன்று பிணைத்தார்!
மாற்றவரும் செயல்களம்மா-அவை
மானுடத்தின் சாதனையால் வெற்றிக்கொடியை
ஏற்றவரும் செயல்களம்மா - இவை
எண்ணஎண்ண களிவெள்ளம் வளருதம்மா!

***

## 32. சமாதானக் குரல்

காடு கழனி விளைவதற்கும்
களையை இன்று களைவதற்கும்
நாடுவாழத் திட்டம்போடும் நாளிலே - போர்
நம்மைத் தள்ள வைக்கும் கொலை வாளிலே!

யந்திரங்கள் சூழ்வதற்கும்
ஆகாயமேல் வாழ்வதற்கும்
சந்திரனை நாம்பிடிக்கும் போதிலே - போர்
தலையெடுக்க லாமோமண் மீதிலே?

பிள்ளை, குட்டி வாழ்வதற்கும்
பேதம்யாவும் வீழ்வதற்கும்
கொள்ளைப்போரை நாம்தடுக்க வேண்டுமே-கிரெம்ளின்
கோபுரத்தில் ஓர் விளக்கந் தூண்டுமே!

நெற்க ளோடு கோதுமையும்
நீண்டு நீண்டு வெண்புறாவைப்
பொற்கையால் அணைந்து மகிழ்ந்தாடுமே - போர்ப்
பூண்டறுக்க வேண்டும்என்று பாடுமே!

அணுபிளந்து வையகத்தை
அற்புதமாய்ச் செய்வதற்குக்
கனகணென்று முரசதிர்ந்த காட்சிபார் போர்க்
கழுகிறந்து வீழ்ந்தநல்ல வீழ்ச்சிபார்

***

## 33. நெய்வேலி நாம் பெற்ற பேறு

அரிய நிலக்கரியே! ஆசையே! முன்னாட்
பெரிய மரங்கள் பெயர்ந்துவீழ்ந் துட்புதைய
மண்ணுள், அதன்வயிற்றுள் மாயமாய்த்தோன்றியநீ
எண்ணுள் அடங்கா இடங்கொண்டு கண் துயின்று
பன்னாள் உறைந்து படிவங்கள் ஆயினாய்!
முன்னாள் அறிய முதல்தந்தாய் இன்றைக்கே!

மண்ணுள் மறைந்த மனிதன் அலாவுதீன்,
கண்ணுள் ஒளிகாட்டிக் கையில் விளக்கேற்றி,
நெய்வேலி மண்ணில் நிலக்கரியாய் நிற்கின்றான்!
மைவான் முகில்போன்றும் மாயப் பசுபோன்றும்
கற்பகம் போன்றும் கருதியவை நல்கவே
முற்பட்டான்! பாரீர்! முகிழ்க்கும் நிலக்கரியாய்!

மூங்கிற் பெருங்காடு முன்னங் குழல்தந்து
வீங்கி வளர்ந்து,விழுந்து, விறகாகி
அழுந்தி அடிமண்ணுள் அங்கே கிடந்து
பழுப்பு நிலக்கரியாய்ப் பாய்ந்தெழுந்த விந்தைதனைத்
தென்னாடு கண்டு சிலிர்ப்பெய்த ஆம், இன்று
பொன்னான நேரம், புதுநாள் பிறந்துளது!

பச்சைப் பயிர் விளைப் பக்குவம் ஆனஉரம்
இச்சைப் போல்எங்கும் இயற்றுவதும், மின் விசையை
ஆக்கி எமக்கே அளிப்பதும், பேரிருள்
போக்கி ஒளியைப் பொழிவதும் செய்யவல்லாய்!
ஊர்திகளும் கப்பலும், உற்பத்தி ஆலைகளும்

பேர்பெற் றியங்கப் பெரிதும் பயன் நல்கும்!
எங்கள் நிலக்கரியே! ஏழை மடிதவழ்ந்த
தங்கக் குழந்தாய்! தமிழ்நாட்டுத் தாய்வளமே!
பொன்னால் மணியால் புகழ்முத்தால் என்ன பயன்?
உன்னால் புகழ் பெற்றோம்! ஓ, ஓ! உலகிடையே
நாட்டின் இளைஞர்காள் நல்ல இலக்கியங்கள்
தீட்டும் அறிஞர்காள்! தென்னக மைந்தர்காள்!
கூனல் விழுந்து குமைகின்ற நம்நாடு
வானம்வரை வளர்ந்து வான்மதியைத் தன் முடியில்
சூடி மகிழத் துணைசெய்யும் நெய்வேலி!
பாடி நடப்பீர் பறவை இனம்போலே!

நாட்டின் எதிர்காலம் நமைப்புகழத் தென்னாறு
காட்டின் பெயர்விளங்கக் கல்வி, கலைவளர
ஈன வறுமை இருள்அகல எவ்விடத்தும்
ஞானச் சுடர்விளைய நன்னும் இடர்களைய
''உழைப்பால் நம்நாட்டை உயர்த்தலாம்" என்றே
அழைப்பிதழ் நீட்டி அழைத்ததுகாண் நெய்வேலி!

காடு கரம்புகள் காணாக் கனவெய்தி
நாடு நகர்களாய் நாட்காலை மாற்றமுற
வாழ்வை உவந்தளிக்கும் வையப் பெருநிதியே!
தாழ்வு தொலைக்கும் தனிச்சுடரே வாழியநீ!

***

# 34. இந்தி எதிர்ப்புப் போர்

சிந்திய இரத்தம் உலரவில்லை - எங்கள்
செந்தமிழ் வாழ்வு மலரவில்லை!
இந்தியை இங்கே அழைக்கின்றீர்கள்! - கூர்
ஈட்டியை நெஞ்சில் நுழைக்கின்றீர்கள்!

தொளைபட்ட புண்கள் மறையவில்லை - எங்கள்
சுதந்திர எண்ணம் நிறையவில்லை!
நுளைபட்ட இந்திக்குப் பூமாலையா? - நாங்கள்
நோற்ற தவத்திற்குச் சாவோலையா?

கார் இருள் இன்றும் விடியவில்லை - எம்
காற்றளை இன்றும் ஒடியவில்லை
தேர்மிசை இந்தி உயர்குவதோ? - எங்கள்
செந்தமிழ் அன்னை அயர்குவதோ?

எக்காளம் கொண்டிங்கே ஊதுகிறோம் - போர்
என்றென வீரர்கள் மோதுகிறார்!
தெக்காணம் எங்கும் எதிர்ப்பொலிகேள் - இதோ
தென்றமிழ் விடுதலை பெற்றிடும் நாள்!
நேற்றுப் பிறந்தோர் இந்திமொழி - நம்
நேரினில் நின்றே உருட்டும்விழி
கூற்றை எதிர்த்து வளர்ந்தநமை - ஒரு
கூகை எதிர்ப்பது தான்புதுமை!
சங்கம் அமர்ந்தது கற்பனையோ? எங்கள்
தன்மானம் இன்றைக்கு விற்பனையோ?
அங்கம் பதறுது தோழர்களே - போர்
அணிகொண் டெழுவீர் வீரர்களே!

சுண்டைக்காய் நாடுகள் வாழ்கின்றன - நின்
தோள்கள் அடிமைக்குத் தாழ்கின்றன!
கண்டதுண்டோ இவ்வர லாற்றினை - இரு
கண்பெற்றும் குருடெனஏன் மாற்றினை?

முத்தமிழ் மன்னர்கள் சோறளித்தார் - நம்
மூதாதை மாந்தர்க்கு வீறளித்தார்
சித்தத்திற் பொங்கும் நெருப்பளித்தார் - நம்
செந்தமிழ் ஓங்கும் விருப்பளித்தார்!

ஓடும் குருதியில் கொப்புளிக்கும் - அணு
ஒவ்வொன்றும் தமிழ்என்று தான்ஒலிக்கும்!
எடு திறந்திடும் பார்; தரணி இதோ!
எழுதுவீர் இன்றைக்கே போர்ப்பரணி!

***

## 35. தென்னம் பந்தல்

வானக் கருமுகில் மீது செழுங்கதிர்
வந்து படுகின்ற வேளை
வெடித்தது தென்னம் பாளை!
ஞானக் குமரி நகைத்தனள் பார், அதோ
நாற்புறமும் தென்னஞ் சோலை!
நன்கு விடிந்திடுங் காலை!
மட்டைக் கரங்கள் விரித்தந்தத் தென்னைகள்
வைகறை யைவர வேற்கும்!
'வா' என்று தான்ஒலி சேர்க்கும்
நிட்டை கலைந்து குருத்தென்ற வாள்முனை
நீட்டிஆ காயத்தைத் தாக்கும்!
நெஞ்சினிற் கள்வெறி சேர்க்கும்
கும்பங்கள் என்கின்ற காய்கள் எடுத்துவிண்

கோமகளை எதிர் கொள்ளும்!
கொஞ்சும் இளநகை துள்ளும்!
அம்பரந் தன்னை மறைக்கும் பெரும்பந்தல்
ஆடி யசைந்தது பாராய்!
அன்பொடு கண்டிட வாராய்!

***

## 36. கவிஞர் கோமான்

கொடியின்றி முடியின்றிக்
குலைகின்ற தமிழ்வாழ்வைக்
கொன்றதன்ஆணிவேரை
அடியின்றிக் கெல்லிடச்
சூழ்ந்தவர் நெஞ்சினில்
ஆணிகொண்ட றைந்து, சிங்கம்
அடியூன்றி நின்றுகண்
அழற்பொறி பறந்திட
ஆர்க்கின்ற அவ்வண்ணமாய்,
இடிகொண்ட குரலினால்
எழுப்பினான் தமிழரை
எந்தைபா ரதி தாசனே!

'அடிமைகொள், எனை' என்று
புலவன் ஒவ்வொருவனும்
அயலவன் கால்பிடிக்க,
மிடிமைகொள் வாழ்விலும்
'செந்தமிழ்க் கெதிரிஎன்
எதிரிதான்!' என்றுகூறிக்
குடிமையும் கொற்றமும்
ஏதடா தமிழன்னை
கொடியின்றி நிற்கும்நாளில்

ஒடிகின்ற செடியல்ல
ஆலடா தமிழ்என்
றுணர்த்தினான் கவிஞர்கோமான்!
செத்தவர் தம்மையே எண்ணநீர் நைவதேன்
கண்ணெதிர் சிற்பமாக,
ஒத்ததோர் ஆற்றலால்
உணர்வுடன் வாழ்பவர்
உண்மையை நீர் உணர்ந்தால்,
பத்தல்ல ஆயிரம்
பாரதி தாசன்கள்
பைந்தமிழ் மண்ணிடத்து
முத்தல்ல மணியல்ல
என்று முகிழ்ப்பரே
முத்தமிழ்க் கடல்முழங்கும்!
'சமநீதி', 1964.

***

## 37. சூரியன்

பூத்தமலர், புதிய மலர்
பொங்கும் சூரியன்!
மூத்தகடலில் காலைவந்து
முளைத்த சூரியன்!

விரிந்த மலர், பிரிந்த மலர்
வெய்ய சூரியன்!
எரிந்த பகலில் உச்சி ஏறி
எரித்த சூரியன்!
சாயமலர், தூயமலர்
சாய்ந்த சூரியன்!
மாயமாக மேற்கில் சென்று
மறைந்த சூரியன்!

## 38. வானவில்

ஏழு நிறங்கள் ஒன்றாய்க் கூடும்
எழில் வானவில்லே!

சூழும் நிறங்கள் யாவும் தோன்றும்
சுடர் வான வில்லே!

கண்ணாடி யாலே பாலங் கட்டும்
கலை வான வில்லே!

அண்ணா! அண்ணா! அண்ணாந்து பாராய்
அதோ வான வில்லே!

***

## 39. பார்க்க வா!

வட்டநிலா பார்க்க வா
வான நிலா பார்க்க வா
எட்ட எட்ட ஓடுகின்ற
இரவு நிலா பார்க்க வா!

மோக நிலா பார்க்க வா
முத்து நிலா பார்க்க வா
மேகமேகக் குதிரை ஏறி
மின்னும் நிலா பார்க்க வா!

அந்தி நிலா பார்க்க வா
அழகு நிலா பார்க்க வா
முந்தி முந்தி நீரில் வந்து
மூழ்கும் நிலா பார்க்க வா!

***

## 40. காவிரியே வா!

வழிந்து வருங் காவிரி
வாசந்தரும் பூவிரி
பொழிந்து தமிழ்ப் பாடலாம் வா வா வா - மலர்ப்
பூங்காவில் ஆடலாம் வா வா வா

குடகு தந்த காவிரி
கொஞ்சுகின்ற பூவிரி
படகேறி நீந்தலாம் வா வா வா - தமிழ்ப்
பட்டாடை ஏந்தலாம் வா வா வா!

திரைவிரியுங் காவிரி
சிந்துகின்ற பூவிரி
கரையேறி ஆடலாம் வா வா வா - தென்றற்
காற்றோடே பாடலாம் வா வா வா!

***

## 41. தமிழ்நாடு

கிழக்கே பெரிய கடல்
நீலம் நிறைந்த கடல்

மேற்கு பெரிய மலை
நீண்ட தொடர்ச்சி மலை

தெற்கே குமரி முனை
தரையின் மூக்கு முனை
வடக்கே திருப் பதியாம்!
வாழ்ந்த தமிழ்ப் பதியாம்!

***

## 42. மாதங்கள்

சித்திரை மாதம் ஒன்று
வரும் வைகாசி இரண்டு
ஆனி மாதம் மூன்று
ஆடி யோடு நான்கு
ஆவணி வந்தால் அய்ந்து
பார் புரட்டாசி ஆறு
அய்ப்பசி மாதம் ஏழு
அப்புறம் கார்த்திகை எட்டு
மார்கழி ஒன்பது பாராய்
தைவந் தால்தான் பத்து
மாசி வரப்பதி னொன்று
பங்குனி தான்பனி ரெண்டு!

***

## 43.கிளி

அக்கா! அக்கா! கிளிப்பிள்ளை
அதுநம் வீட்டு மாப்பிள்ளை!
சொல்லிக் கொடுக்கும் தமிழ்பேசும்
தொல்லைக் கொடுத்தால் நமை ஏசும்!

அண்ணா அண்ணா| கிளிப்பிள்ளை!
அதுநம் வீட்டு மாப்பிள்ளை!
சோறு கொடுத்தால் அது பேசும்
தொல்லை கொடுத்தால் நமை ஏசும்!

பாட்டி! பாட்டி கிளிப்பிள்ளை
பார்நம் வீட்டு மாப்பிள்ளை
கூட்டில் அடைத்தால் நமை ஏசும் கொஞ்சி
அழைத்தால் தமிழ்பேசும்!

***

## 44. ஔவைப் பாட்டி

அவ்வைப் பாட்டி மூதாட்டி
அவளே நமக்கு வழிகாட்டி
ஒவ்வோர் நாளும்அவள் சொல்லை
உற்றுக் கேட்டால் இடர் இல்லை!
அவ்வைப் பாட்டி மூதாட்டி
அவளே நாட்டின் வழிகாட்டி
செவ்வையாக அவள் சொல்லை
சேர்ந்து கற்றால் இடர்இல்லை!

***